Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

தனிப்பிரதி ரூ. 5/-
Reg. No. KKI/63/2015-2017

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 63 — கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான் சங்.128:1 — ஜுலை 2017 No.7

## என்றென்றும் ஜீவிக்கிற நமது மத்தியஸ்தர்

**Our Ever - Living Intercessor**

Charles H Supurgeon

"மேலும் தமது மூலமாய்த்
தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக
வேண்டுதல் செய்யும்படிக்கு அவர்
எப்பொழுதும் உயிரோடிருக்கிறவரா
கையால் அவர்களை முற்று முடிய
இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்"
*எபி.7:25.*

அவர் நமக்காகப் பரிந்து பேச
என்றென்றும் ஜீவிக்கிறவர் என்று
சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்துவின்
முழுமையான வாழ்வு நித்திய காலம்
முழுவதிலும் - அவரது எல்லையற்ற,
முடிவற்ற மகிமைப்படுத்தப்பட்ட
இருப்பு நிலை - இன்றும் அவரது ஜனங்
களுக்காகவே 'அவர் என்னை நேசித்து
அவரையே எனக்காகத் தந்தார்' என்பது
உண்மை. இதை நிகழ் காலத்தில் 'அவர்
என்னை நேசிக்கிறார், அவரை எனக்காகத்
தருகிறார்' என்பதும் இன்னும் அதிகக்
கருத்து நிறைந்த உண்மையாகும்.
கிறிஸ்து சபையை நேசித்து அதற்காக
தனது ஜீவனைக் கொடுத்தார். இப்போ
தும் சபையை நேசித்து அதற்காக தனது
ஜீவனைக் கொடுக்கிறார். முடிவற்ற
இயேசுவின் நல்வாழ்வு நமக்கு எத்தனை
தூண்டுதலை அடக்கியதாகயிருக்கிறது.
அவர் முழுமையாக நமக்காக வாழுகிற
படியால் நாமும் முழுமையாக
அவருக்காக வாழுவோம்.

ஜீவிக்கும் கிறிஸ்துவின் இந்த
சத்தியம் நமது மிகப் பெரிய தேவை
களில் நினைவு கூரப்பட வேண்டும்.
சர்வ வல்லவரும் தெய்வீக தன்மை
யுடையவருமான ஒருவர் நமது உயரிய
நன்மைகளுக்காகப் பரலோகில் என்
றென்றைக்கும் வாழுகிறார். அவரை
மிகுந்த அன்போடு பணிந்து கொள்வோ
மாக. இதன் மூலம் நமது தேவை எவ்வளவு
பெரியதென்றும், நமக்கு உயிரோடிருக்
கும் ஒரு இரட்சகர் நமக்காகப் பரிந்து
பேச எப்போதும் தேவை என்பதும்
காண்பிக்கப்படும். நமக்காக மரித்த ஒரு
இரட்சகர் மட்டும் நமக்குப் போதாது.
இப்போதும் நமது வாழ்வின் ஒவ்வொரு
வினாடியும் நம்மோடு வாழும் உயிருள்ள
இரட்சகர் நமக்கு வேண்டும். அவர்
நமது ஆவியினைக் குறித்த அக்கரையு
டையவராயிருப்பார். எல்லா வழிகளிலும்
நமக்காக பரிந்து பேசுவார். எல்லாத்
தீமைகளுக்கும் நம்மை விலக்கி இரட்சிப்
பார். நமது தேவையின் காலங்கள்
எப்போதுமுண்டு. இயேசு அப்போ
தெல்லாம் நம்மை கவனிக்கிறார். அவ
ரது பணி வெளித்தோற்றமானதல்ல.
இது நமக்கு மிகப் பெரிய ஆறுதலைத்
தருகிறது. நமது பாவங்கள் நம்மை அதிக
மாக அழுத்தும்போது இந்த சத்தியத்தை
நாம் பற்றிக் கொள்ள வேண்டும்.

இயேசு ஜீவிக்கிறார், எனது
மிகப் பெரிய மீட்பர் எனக்காக உயிரோ
டிருக்கிறார். அவர் வல்லமை யின் சகல
முழுமையோடும், மகிமையோடும்
தமது வாழ்வை அர்ப்பணித்து எல்லாத்
தீமையி லிருந்தும் எனது ஆத்துமாவை
பாதுகாக்கிறார். இதனடிப்படையில்
நான் இளைப்பாற வேண்டாமா? இப்ப
டிப்பட்ட பாதுகாவலர் இருக்கும் போது
நான் ஏன் பயப்பட வேண்டும்? இயேசு
தமது முடிவற்ற வாழ்வின் பெலனை
செலவு செய்வதால் நாம் பெற்றுக் கொள்
ளும் ஆசீர்வாதங்கள் அனேகமல்லவா!

நமக்கு ஒரே பிரதான ஆசாரியர்
இருக்கிறார் என்பது எவ்வளவு ஆறுத
லானது! அவர் என்றென்றும் உயிரோடி
ருப்பவர். அவருக்கு முற்பிதாவுமில்லை,
வாரிசுமில்லை, ஏனெனில் நமக்காகப்
பரிந்து பேசும் பிரதான ஆசாரியத்துவப்
பணியை அவர் செய்து கொண்டே வாழ்
கிறார். எனது ஆத்துமா அவர் செய்த
ஒரே பலியின் மீது இளைப்பாறுகிறது
என்ற விசுவாசத்தில் நிலைத்திருக்கிறது.
இந்த பலி ஒரே முறை செய்யப்பட்டதும்
இனி ஒருபோதும் செய்யப்படாதது
மாகும். அது முற்றிலும் போதுமானது.
அவர் இனி ஒரு போதும் மரிப்பதில்லை.
இயேசு நமது இருதயத்தை அறிகிறவர்.
அவர் அது இயங்க ஆரம்பித்ததிலி
ருந்தே அதனை அறிகிறார். அவர் எனது
துக்கங்களை அறிந்து அதன் வேதனை
களை சுமக்கிறார். அவர் அவற்றையும்
என்னையும் எனது வயோதிபம் எனது
பெலனை ஒடுங்கச் செய்யும் வரை
சுமப்பார். மரணம் ஏற்பட்டு நான்
நித்திரை செய்யும் போதும் அவர்
மரிப்பதில்லை. ஆனால் தனது மாறாத
ஆசீர்வாதத்திற்குள் என்னை ஏற்றுக்
கொள்ள ஆயத்தமாயிருப்பார். இந்த
அனுபவம் நம்மைக் களிகூரப்பண்ண
வேண்டும்.

### தொடர் மன்றாட்டின் தேவை

தொடர்ந்து நம்மை நமது
பலவீனங்களிலிருந்து பாதுகாத்து நமது
பாவ இயற்கையிலிருந்து நம்மை
விடுவிக்கும் பிரதான ஆசாரியராகிய
இயேசு இல்லா விட்டால் நமது நம்பிக்கை
என்ன? பாதை கரடு முரடானது, உலகம்
பாவம் நிறைந்தது, நமது அலைச்சல்கள்
மிகுதி, தேவைகள் மிக அதிகம். எனவே
தொடர்ந்து மன்றாடும் நித்திய மத்தி
யஸ்தர் தேவை. நாம் ஆபத்தை விட்டு
விலகவில்லை, எனவே பாதுகாவலரின்
ஜெபம் நமக்கு மிகவும் அவசியம். நாம்
பலவீனரும், தவறு செய்கிறவர்களுமா
யிருக்கிறோம். எனவே எப்போதும்
நம்மைப் பாதுகாக்கும் பாதுகாவலர்
அவசியம். நாம் அனைவரும் ஒரு
நாளில் பலமுறை இரக்க ஆசனத்தைக்
கிட்டிச் சேருகிறவர்களாயிருக்கிறோம்.
இயேசு தாமே எப்போதும் அங்கிருந்து
கொண்டு நமது வேண்டுதல்களையும்
துதிகளையும் தேவனுக்கு ஏற்புடைய
வைகளாக மாற்றக் காத்துக் கொண்டி
ருக்கிறார். நாம் ஒவ்வொரு நாளும்
நமக்குள்ளே காணப்படும் பாவத்தின்
போராட்டத் தாலோ, சரீரத்தில் தேவ
பணியால் ஏற்படும் பாடுகளாலோ,
அல்லது நமது சகோதரர் மீதுள்ள மன
உருக்கத்தாலோ நெருக்கப்படுகிறோம்.
இவையெல்லாவற்றிற்கும் பரத்திலிருந்து
வரும் கிருபை ஒன்றே பரிகாரமாயிருக்
கிறது. நமது பாரங்களை இறக்கி
வைக்கக் கூடிய ஒரு மத்தியஸ்தர் வேண்
டும். அவரிடம் நமது துக்கங்களைக் கூற
வேண்டும். இயேசு ஒருவர் மட்டுமே
சதாகாலங்களிலும் ஜீவித்து நமக்காகப்
பரிந்து பேசக் கூடியவர்.

### எண்ணற்ற ஆசீர்வாதங்கள்

நாம் வளர்ந்து பெருகவும்
பயனுள்ளவர்களாயிருக்கவும் தேவை
யான விலையேறிய வரங்களையும்,
கிருபைகளையும் பெற்றுத் தருகிறார்.
இவ்வுலகில் நாம் சேவை செய்யவும்,
வரப் போகும் வாழ்விற்கு நாம் தகுதி
யைப் பெறவும் தேவையான ஆவிக்
குரிய வாழ்வினைப் பெற அவரது கரங்
கள் நம்மை நடத்துகின்றன. அவரது
ஜெபங்கள் தேவ ஆவியினை நமக்கு
அதிகமாகக் கொண்டு வரவும் கூடும்.
அதன் மூலம் எல்லா நற்கிரியைகளுக்
கும் நம்மைப் பூரணராக்கவும் அவரின்றி
நம்மால் கூடாது.

தந்திரம் நிறைந்த ஒரு சத்துரு
உயிரோடிருப்பதை அறிவீர்களா?
அவன் சகோதரரைக் குற்றப்படுத்து
கிறவன். அவன் இரவும் பகலும் தேவ
னுக்கு முன்பாக அவர்களைக் குற்றப்
படுத்துகிறவன். ஆனால் நமது மத்தியஸ்
தர் நமக்கிராவிட்டால் நமது நிலை
என்ன? அவன் குற்றப்படுத்துகிறவன்
மட்டுமல்ல, அவன் சோதனைக்காரன்.

(3-ம் பக்கம் பார்க்க)

# வருகையின் தூதன்

ஆசிரியர்:

வெஸ்லி தேவதாசன்

(Former Editor : S. Devadason 1955-1999)

முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் 629 001

Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com


Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

## வாக்குத்தத்தம்

**"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்"** *ஏசாயா 54:13.*

## வாசகருக்கு என் அன்பு கடிதம்

***கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,***

*நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*

*"கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள உங்கள் அன்பையுங் குறித்து நாங்கள் கேள்விப்பட்டு, பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையினிமித்தம்,*

*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி,* **எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்**" *கொலோசெயர் 1:3-5*

*முதல் முறையாக உங்களிடம் எனது சங்கடத்தை (மனக்குறை, மனத்தாங்கல்,* grievance*) பகிர்ந்து கொள்கிறேன்.*

**1.** *சுமார் 28 ஆண்டுகளாக ஒரு தேவ ஊழியர் கன்னியாகுமரியில், வருடந்தோறும் முதல் வெள்ளிக்கிழமை* (First Friday) *எழுப்புதலுக்காக ஒரு உபவாச ஜெபம் நடத்தி வந்தார். தேவ கிருபையால் அடியேன், குறைந்தது 25 வருடங்கள் தொடர்ந்து அந்த உபவாச ஜெபத்தில் தேவனுடைய வசனத்தை பிரசங்கித்து, ஜனங்களை ஜெபத்தில் நடத்தினேன்.*

*கடைசியாக 2012-ம் ஆண்டு ஜனவரி 6-ம் தியதி முதல் வெள்ளிக்கிழமை உபவாச ஜெபத்திற்காக வருகையின் தூதன் பத்திரிகையில் அறிவிப்பு வெளியிட்டிருந்தோம். எனது நண்பரும், போதகருமான பாஸ்டர்* **S.சாம் செல்வராஜ்**, *சென்னை, அவர்களுடைய அலுவலகத்திலிருந்து, கன்னியாகுமரியில் இறங்க வேண்டிய பஸ் நிறுத்தத்தைக் குறித்து விசாரித்தார்கள். அதன்படி, ஜனவரி 6-ம் தியதி காலையில் போதகரும், உதவி போதகருமாக இரண்டு பேர்* **சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு** *(பிரசங்கிப்பதற்கல்ல) வந்து சேர்ந்தார்கள்.*

*ஆனால், நாகர்கோவில் பட்டணத்தில் மிகவும் பிரபல்யமான* '**கல்கோயில்**' (Home Church) *அருகில், ஆண்கள் ஐக்கிய ஹாலில் நடைபெற்ற உபவாச ஜெபத்தைப் பற்றி ஒரு வாசகர் கூட வினவவோ, வரவோ இல்லை.*

**2.** *2012-ம் ஆண்டு கன்னியாகுமரியில் நடந்த உபவாச ஜெபத்தில் மிகவும் சவாலான ஒரு செய்தியை அளிக்க அன்பின் ஆண்டவர் அடியேனுக்கு இரக்கம் பாராட்டினார். அந்த ஜெபம் முடிந்த உடனேயே, அடுத்த மாவட்டங்களிலும் இவ்வித உபவாச ஜெபங்களை நடத்த வேண்டுமென்ற பாரத்தை தேவன் கிருபையாய் எங்களுக்குத் தந்தார். அதன்படி 2013-ம் ஆண்டு தூத்துக்குடியிலும், 2014-ம் ஆண்டு பாளையங்கோட்டையிலும், 2015-ம் ஆண்டு ஷெக்கைனா அசெம்பிளி ஆப் காட் சபை, சிவகாசியிலும் இவ்வித உபவாச ஜெபங்களை நடத்த தேவன் இரக்கம் பாராட்டினார்.*

*2016-ம் ஆண்டு முதல், மாதந்தோறும் வெவ்வேறு இடங்களில் இவ்வித உபவாச ஜெபங்களை நடத்த வேண்டும் என்ற பாரத்தை தேவ ஆவியானவரே கிருபையாய் எங்களுக்குத் தந்தபடியால், 2016-ம் ஆண்டு 12 உபவாச ஜெபங்களை நடத்தி முடித்துள்ளோம்.*

*2017-ம் ஆண்டுக்கும் 12 இடங்களை ஒழுங்கு செய்துள்ளோம். மேய் மாதம்,* T.R.*பட்டினம்* **புது வாழ்வு எல்லாம் இயேசுவுக்கே திருச்சபைப்** *போதகர்* **R.தெட்சணா மூர்த்தி** *அவர்கள் ஜெபத்தோடு மிகவும் நேர்த்தியாய் ஒழுங்கு செய்திருந்தார்கள். ஆலயத்தின் முன்பக்கம் மிகப் பெரிய பந்தல் போட்டிருந்தார்கள்.*

*எல்லாம் இயேசுவுக்கே சபைகளின் தலைமைப் போதகர்* **வின்சென்ட் லூர்த்** *அவர்கள் சரியான சமயத்திற்கு வந்து மிகுந்த ஆத்தும வேதனையோடு ஒரு பாடலை பாடி, ஜெபித்து ஆரம்பித்தார்கள். பிந்தின பகுதிகளை நாங்கள் வழக்கம் போல நடத்த தேவன் இரக்கம் பாராட்டினார்.*

**3.** *வருகையின் தூதன் அலுவலகத்திலிருந்து உங்களுக்கு ஒரு கடிதம் வருமானால். அதை அலுவலக பணியாளர் உங்களுக்கு அனுப்புவதில்லை. ரெசீது மற்றும் உங்கள் முகவரி ஒட்டப்பட்ட உறையை* (cover) *என்னிடம் தருவார்கள். உங்கள் ரெசீதையும், முகவரியையும் சரிபார்த்து, என்னுடைய ஒப்பம் இடப்பட்ட நன்றி கடிதத்துடன் ஜெப அட்டை* (Prayer Card) *அல்லது உபவாச ஜெபத்திற்கான பதிவு தாள்* (Registration) *இவைகளை கவரில் வைத்து ஜெபத்துடன் தபாலில் அனுப்ப கொடுக்கிறேன்.*

*இதே போல நாகர்கோவில் உபவாச ஜெபத்திற்கு குமரி மாவட்டத்திலும், நாகர்கோவில் பட்டணத்திலுமுள்ள அநேகருக்கு என்னுடைய கரங்களாலேயே பதிவு தாள்களை அனுப்பினேன், ஆனால் ஒருவர் கூட வரவில்லை.*

*அப்படியானால் உபவாச ஜெபம் எப்படி நடந்தது? நீங்கள் தேவனை துதிக்கவும், தொடர்ந்து அடிமைக்காக ஜெபிக்கவும் கீழே எழுதுகிறேன்:*

*தேவன் கிருபையாய் அந்த சிறிய ஹால் நிரம்ப ஜனங்களை கொண்டு வந்தார். விசேஷமாக பெண்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அசையாமல், அந்த இடத்தை விட்டு எழும்பாமல் இருந்தார்கள். அதில் விசேஷம் என்னவென்றால், சனிக்கிழமை அதிகாலை முதல் நான் சுகவீனமாய்* (Fever) *இருந்தபடியால், மிகவும் பெலவீனத்தோடேயே தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்தேன். எல்லா கனமும் மகிமையும் புகளும் அப்பா ஒருவருக்கே!*

**4.** *பவுல் இவ்வாறு எழுதுகிறார்:* **நான் இரவும் பகலும் இடைவிடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம் பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருந்து,** 2தீமோ.1:3.

*அடியேன் கடந்த முறை சென்னை வந்தபோதே நமது வாசகரில் சிலரை பார்க்க* **அதிக வாஞ்சையாயிருந்தேன்.** *ஆனால் அழைப்பின் எதிரொலி தேவசபை, சேப்பாக்கம், ஓரேப் ஊழியங்கள், விருகம்பாக்கம் என்று இரண்டு இடங்களில் உபவாச ஜெபங்கள் நடைபெற்றும், வாசகர் யாரும் வரவில்லை. உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.*

*"இயேசுவானவர் எங்கும் நடந்து திரிந்து பிரசங்கித்தும் மக்களைக் குணமாக்கியும் வந்தார். ஆனால் திரளான மக்களைக்* '**கண்டபோதோ**' *அவர்* '**மனதுருகினார்**' *என்று வாசிக்கிறோம் (மத்.9:35,36). ஏற்கெனவே அவர் மனதுருக்கமுள்ளவர்தானே? ஆனால் நிலையை நேரில்* '**பார்த்தபோது**' *அது அவரை இன்னும் உலுக்கி உருக்கிற்று. பார்ப்பது பார்ப்பதுதான்!"*

**எனவே எங்கெல்லாம் உபவாச ஜெபங்கள் நடக்கிறதோ அங்கெல்லாம் வாசகரை பார்க்க விரும்புகிறேன்.**

(8-ம் பக்கம் பார்க்க)


**வருட சந்தா ரூ.100.00**

சந்தா, காணிக்கை, கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

***வருகையின் தூதன்***

*நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629 001.*

**VARUKAYIN THOOTHAN**

Newport Street, Nagercoil-629 001.

**Mobile:** 95432 21008

**வங்கி கணக்கு எண்**

**VARUKAYIN THOOTHAN**

A/c. No.:431521036

Indian Bank,

W.C.C. Road, Nagercoil-1

IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்.

**email :**

varukayinthoothan@hotmail.com

# ஜெப போராட்டத்தில் கிறிஸ்துவுடன்

**With Christ in the Prayer battle**

Henry Blackaby

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்மை மடங்கடிக்க சதித்திட்டங்களைத் தீட்டுகிறவன். "சீமோனே சீமோனே; இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான்; நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்" லூக்.22:31,32 என்றது போல அடிக்கடி அவரது ஜெபத்தால் நாம் தீமையிலிருந்து மறைக்கப்பட்டோம். எத்தனை நச்சு அம்புகள் ஆண்டவரது மத்தியஸ்தத்தினால் நம் மீது படாமல் அவரது கேடகம் நம்மைப் பாதுகாத்தது.

ஆண்டவர், "நீ சமுத்திரத்தின் அடித்தளங்கள் மட்டும் புகுந்து, ஆழத்தின் அடியில் உலாவினதுண்டோ?" யோபு 38:16 என்று கேட்கிறார். அவரது பரிந்து பேசுதல் சமுத்திரத்தினளவிலான ஆசீர்வாதங்களுக்கு ஏதுவாயிருக்கிறது. தூய ஆவியால் நமது கண்கள் பிரகாசமடைந்திருந்தால் தேவ பிள்ளைகளைச் சுற்றிலும் மலை முழுவதிலும் அக்கினி மயமான குதிரைகளும், ரதங்களும் நிற்பதைக் காணலாம். இந்தக் குதிரைகளை வழிநடத்துவது யார்? இந்த இரதங்களை ஓட்டுவது யார்? தேவனுடைய கூடாரத்தை சுற்றிலும் ஆவியின் சேனைகளை வழிநடத்தும் தலைவன் யார்? எல்லாவற்றையும் நமக்காகவே செய்து முடிக்கிற இம்மானுவேல் என்னும் சர்வ வல்ல மத்தியஸ்தர் அல்லவா!

சகல அந்தகார வல்லமைகளையும் ஆண்டவராகிய இயேசு தமது வேண்டுதல்களால் கட்டுப்படுத்தி நமது விடுதலைக்காக அனைத்து ஒளியின் வல்லமைகளையும் அசைக்கிறார். அவரது வேண்டுதல்கள் நம்மைச் சுற்றிலும் ஆசீர்வாத சூழலை உருவாக்கி அதற்குள் நாம் வாழவும் அசையவும் செய்கிறார். நாம் நமது மத்தியஸ்தரின் இடைவிடாத கரிசனையின் ஆழத்தை அறியவோ கணக்கிடவோ முடியாது. காலங்கள் முடிவுற்றாலும், அனைத்து பரிசுத்தவான்களும் இரட்சிக்கப்பட்டாலும் அவர்களது ஆசீர்வாதத்தின் தொடர்ச்சி போன்ற அனைத்தும் அவரது முடிவற்ற வேண்டுதலினாலேயே ஏற்படுகிறது.

நான் இந்த ஜெப போராட்டம் எனக்குரியதல்ல என்று தட்டிக் கழிக்கவில்லை. "ஹென்றி நீ உன் மகனுக்காக ஜெபித்தாய். இனி அவனது வாழ்வின் பிற்கால போராட்டத்தை அவன் பார்த்துக் கொள்வான். இப்போது அவனுக்கு உதவி செய்தாய், அவன் வெற்றி பெறுவான்" என்று ஆண்டவர் என்னோடு பேசினார். அவன் ஒரு ஊழியக்காரனாக மாறினான். எனது ஐந்து பிள்ளைகளும் தேவ பணியிலிருக்கிறார்கள். தேவன் ஜெப போராட்டத்தில் வெற்றி தந்ததற்காக அவருக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

*மத்.26:36-46* வசனங்களில் கெத்செமெனேயில் ஆண்டவராகிய இயேசு தனது வாழ்வில் ஒரு ஜெப போராட்டத்தை நடத்தினார் என்று படிக்கிறோம். அவர் தமது சீஷர்கள் அவரோடு கெத்செமெனே செல்லும் படி அழைத்தார். அவர்களில் மூவரை அழைத்து ஜெபிக்கும்படி சென்றார். அவர்களிடம் 'விழித்திருந்து ஜெபியுங்கள்' என்று கேட்டுக்கொண்டார். "அப்பொழுது இயேசு அவர்களோடே கெத்செமெனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து சீஷர்களை நோக்கி நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும், நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி பேதுருவையும், செபேதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக் கொண்டு போய் துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார் *மத்.26:36-37.*

இந்த அளவிலான ஜெபத்தில் நீங்கள் இயேசுவுடன் இருந்ததுண்டா? ஜெபிக்க ஆரம்பித்தபோது துக்கமும் வியாகுலமும் ஏற்படுகிறது. தேசத்தில் மாற்றம் ஏற்பட நாம் இயேசுவோடு சென்று இவ்வகையான ஜெபத்தில் இணைய வேண்டும்.

*38-ம்* வசனத்தில் "என் ஆத்துமா மரணத்திற்கு ஏதுவான துக்கங் கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி என்னோடே கூட விழித்திருங்கள்" என்று இயேசு சொன்னார். அவர் உலகத்தின் பாரத்தை சுமக்கிறவர். அவரது பாரத்தோடு நாம் ஜெபிக்கா விட்டால் உலகில் எந்த மாற்றமும் வர முடியாது. நீங்கள் ஜெபிக்க ஆரம்பிக்கிற நேரத்தில் பாரத்தோடு ஜெபிக்கும் இயேசுவைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

"சற்று அப்புறம் போய் முகங்குப்புற விழுந்து . . . . ஜெபம் பண்ணினார்" வ.39. அனேக மக்கள் துதிக்க விரும்புகிறார்கள். ஆனால் முகங்குப்புற விழுந்து ஜெபிப்பதில்லை. தேவ ஜனங்கள் கூடி வரும்போது குறிப்பிட்ட வேளையில் துதிப்பதை நிறுத்தி விட்டு ஜெபிக்க வேண்டும். துதித்தல் என்பது ஜெபத்திற்கும் மனந்திரும்புதலுக்கும் ஈடாகாது. தேவ ஜனங்கள் இன்று மனந்திரும்புவது மிகப் பெரிய தேவையாயிருக்கிறது.

தேவ ஜனம் மனந்திரும்பா விட்டால் எழுப்புதல் ஏற்படாது; ஆயினும் அவர்கள் மனந்திரும்பப் போதிக்கப்படவில்லை. இழந்துபோனவர்களுக்காக அல்ல, அதிகமான தேவ அழைப்பு வேத புத்தகத்தில் தேவ ஜனங்களுக்கு நேராகவே கூறப்படுகிறது. அவர்கள் ஞாயிறு தோறும் ஆலயத்திற்கு வந்தாலும் தேவன் அவர்களை மனந்திரும்புதலுக்கு அழைக்கிறார் என்பதை அவர்கள் அறியவில்லை. தேவனுடைய நிறைவைப் பெற மனந் திரும்புதல் அவசியம். தேவ ஜனத்திற்கு இயேசு அளித்த செய்தி என்ன? 'மனந்திரும்புங்கள் தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது' *மத்.4:17* என்பதே. தேவனுடைய முழு பிரசன்னமும், வல்லமையும், முழுமையும் உங்களுக்கு மிக அருகில் காத்திருக்கின்றன. அவை பெற்றுக்கொள்ளப்பட தயாராயிருந்தாலும் நீங்கள் மனந்திரும்புவது அவசியம்.

மனந்திரும்புதல் என்பது நீங்கள் தவறான பாதையில் செல்லுகிறீர்கள் என்றும் நீங்கள் திரும்பி தேவனுடைய பாதையில் செல்ல வேண்டும் என்பதையும் குறிக்கிறது. ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்வதால் சரியான பாதையில் செல்கிறோம் என்பது தவறு. வேத புத்தகத்திலும் இதை நாம் காணலாம். 'அவர்கள் தேவையை அறியாமல் அழிந்து போனார்கள்'. இஸ்ரவேல், யூதா, எருசலேம் ஆகியவற்றில் தேவாலயம் இடிக்கப்பட்டு தேவஜனம் 70 ஆண்டுகள் சிறையிருப்பை அனுபவிக்கக் காரணம் அவர்கள் பாவம் செய்தும் மனந்திரும்புதலின் தேவையை உணரவில்லை. ஆகவேதான் தேவ குமாரனின் முதல் வார்த்தை 'மனந்திரும்புங்கள்' என்பதாயிருந்தது. தேவனுடைய முழு பிரசன்னம், வல்லமை, ராஜ்யம் ஆகியவை பகிர்ந்தளிக்கப்பட காத்திருந்தன. இதே செய்திதான் உங்களுக்கும் அளிக்கப்படுகிறது

### தூங்கிய சீடர்கள்

*மத்.26:39-45*

தேவனுடைய நித்திய திட்டம் நிறைவேற்றப்படும் வேளை நெருங்கி விட்டது. இயேசு, பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரை அந்த தூய வினாடிகளில் தம்மோடிருக்க இயேசு அழைத்தார். இந்த மூவரும் இயேசு மறுரூபமலைக்குச் சென்ற போது அவரோடிருந்தவர்கள். லூக்.*9:30,31* வசனங்களில் அவர் மோசே, எலியா ஆகியோரை சந்தித்து 'அவர் எருசலேமில் நிறைவேற்றப் போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்' என்று படிக்கிறோம். எருசலேமில் தமது மரணத்தால் உலகம் முழுவதையும் விடுவிக்கப் போகிறார் என்பதைக் குறித்து அவர்கள் பேசிக் கொண்டனர். இயேசு அந்த மூன்று சீஷரையும் அழைத்து அந்த வேளையின் முக்கியத்துவத்தையும், ஜெபத்தின் முக்கியத்துவத்தையும் காண்பிக்க விரும்பினார். **தேவபிள்ளை ஜெபிக்கும் போது வானமும் பூமியும் நெருங்கி வந்து சரித்திரமும் மாறுபடுகிறது.**

### தேவன் சாஸ்கற்றூனை சந்தித்தார்

தேவ சமுகமும் வல்லமையும் இறங்குவதற்கு இரு ஆண்டுகளுக்கு முன்பு சாஸ்கட்சேவானிலுள்ள சாஸ்கற்றூனில் இருக்கும்படி தேவன் கிருபை செய்தார். நான் உடன் போதகர்களையும் பிறரையும் சந்தித்து ஜெபித்தேன். அப்போது தேவன் என் இருதயத்தில் கிரியை செய்தார். அவர் என் இருதயத்

தின் பாவங்களை கண்டுபிடித்து அவற்றை அவர் கழுவும்படி அவரிடம் ஒப்புவிக்கச் செய்தார். ஜெப வேளையின் அனுபவம் வாரா வாரம் முக்கியமானதாக மாறியது. நான் எனது சபைக்கு ஓடிச் சென்று எனது சபை மக்களோடு இந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டேன். சபை மக்களும் கழுவப்பட்டு தேவனுடைய இருதயத்தையும் மனதையும் உணர்ந்தனர்.

பில் மெக்லியோட் என்ற பக்தன் என்னை அழைத்து "நாம் ஜெபித்துக் கொண்டிருந்த காரியங்கள் நிறைவேறி விட்டன" என்றார். அவரது சபையின் இரு மூப்பர்கள் இரு ஆண்டுகளாக ஒருவருக்கொருவர் பேசுவதில்லை. முந்தின இரவு ஒருவர் தமக்கு ஏற்பட்ட பாவ உணர்வால் ஆலயத்தின் முன் பகுதிக்குச் சென்றார். அதே வேளையில் அந்த பேசாத சகோதரரும் பாவ உணர்வால் முன் பகுதிக்கு வந்தார். அங்கு அனைத்து சபை மக்களுக்கு முன்பாகவும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு அழுது மனந்திரும்பி தங்கள் உறவை சரிப்படுத்தினர். இது போன்ற பல சம்பவங்கள் நிகழ்ந்தன. எனவே ஆராதனை அனேக மணி நேரங்கள் தொடர்ந்தது. தேவன் சபை மக்களைத் தொட்டார்.

தேவன் சாஸ்கற்றூன் பட்டணம் முழுவதுமாகத் தொட்டார். பல வாரங்கள் தேவ ஆவியானவர் பட்டணத்தின் மீது வல்லமையாய் கிரியை செய்தார். சபைகள் மனந்திரும்பின. தேவன் தொட்ட மக்களில் அவரது வல்லமை பல ஆண்டுகள் நீடித்தது. நான் 10 அங்கத்தினர் அடங்கிய ஒரு சபையைப் பராமரித்து வந்தேன். அவர்களது வாழ்விலும் தேவ வல்லமை இறங்கிய போது 38 புதிய சபைகளை அவர்கள் உருவாக்கினர். இதுவரை அவர்கள் பிற சமுதாயத்தினர் மத்தியில் பணி செய்தவர்களல்ல. நாங்கள் அறுப்புக்கு வேலையாட்கள் வேண்டுமென ஜெபித்தோம். இப்போது பல்கலைக் கழக மாணவர் மத்தியில் பணி செய்து 180 பேரை ஸ்நானப்படுத்தினர். நூற்றுக்கு அதிகமான பேர் தங்களை ஊழியத்திற்காக அர்ப்பணித்தனர். ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்களுக்காகப் பயிற்சியளிக்க ஒரு வேதாகமக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அதன் மூலம் 480 பேர் பயிற்றுவிக்கப்பட்டு கனடாவிலும் சுற்றிலுமுள்ள மக்களை மனந்திரும்பச் செய்தனர். எனது நான்கு மகன்களும் கூட தேவ தொடுகையால் தேவனது பணிக்கு அழைக்கப்பட்டனர்.

## எழுப்புதலுக்கு முன்னால் அசாதாரண ஜெபம்

கெத்செமெனேயின் முக்கிய ஜெப வேளையை சீடர்கள் தவறவிட இயேசு விரும்பவில்லை. தேவன் பெரிய பலத்த எழுப்புதல்களை ஏற்படுத்திய போதெல்லாம் அதற்கு முன்பாக அசாதாரண அளவிலான ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டுள்ளன. தாங்கள் இதுவரை அறியாத காரியங்களை செய்யும்படி மக்களை அழைக்க அவர்களது உள்ளங்களில் கிரியை செய்கிறார். ரோம சாம்ராஜ்யத்தை மாற்றியமைக்கவும் தொடவும் அவரது சீஷர்கள் முக்கிய மானவர்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆகவே அவர்கள் இருயத்தில் ஜெபத்தின் தாகத்தை ஏற்படுத்த ஜெபிக்க அழைத்தார்.

தேவனுடைய இருதயத்தில் ஏற்படும் பாரத்தை, அவர் தமக்குச் சொந்தமானவர்களில் புகுத்துகிறார். பிதாவின் வேளை கெத்செமெனேயாயிருந்தது. இந்த வினாடியை அவர் முன் குறித்திருந்தார். இது கிறிஸ்து உலக மக்கள் அனைவரையும் தன்னுடன் இணைக்கும் வேளை. 'என் ஆத்துமா மரணத்திற்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது' என்று மூன்று சீஷரிடமும் கூறினார். அவர்கள் அவரது வியாகுலத்தை கவனித்தனர். லூக்.22:44-ல் அவரது வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாக விழுந்தன என பார்க்கிறோம்.

உலகத்தில் எழுப்புதல் ஏன் ஏற்படவில்லை? நாம் எழுப்புதலுக்கான ஜெபம் ஏறெடுக்கவில்லை. பாவம் ஆண்டு கொண்டிருப்பதை பார்த்து விட்டு திருப்தியுடனிருக்கிறோம். ஆனால் தேவனிடம் பாவம் எவ்வளவு கொடிது என்று பராது சொல்கிறோம். **கிரயம் செலுத்த நாம் ஆயத்தமாயிருந்தால் எழுப்புதல் ஏற்படும்.** அந்த ஜெபம் சாதாரணமானதாக அல்ல, அசாதாரணமானதாயிருக்க வேண்டும். ஜெபத்தில் இன்னொரு நிலைக்கு தேவன் எடுத்துச் செல்ல வேண்டும். அவர் உங்களை தமது குமாரனுடன் இணைத்து நீங்கள் அந்த வேளையின் வழியாகக் கடந்து செல்லவும் அவரது ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்து எந்த அசைவையும் பார்த்து, அவர் 'ஒரு மணி நேரமாவது என்னோடு விழித்திருக்கக் கூடாதா' என்று கூறுவதைக் கேட்க வேண்டும்.

சங்.78:9-11 வசனங்கள் தேவ ஜனத்தின் ஒரு பகுதியைக் குறித்த காரியங்களை வெளிப்படுத்துகிறது. இது தேவனது தெரிந்தெடுத்தலின் இன்னொரு வினாடி. தனது ஜனங்கள் சில யுத்தங்களை சந்திக்க நேரிடும் என்று தேவன் அறிந்திருந்தார். அவர் எப்பிராயீமை அழைத்து யுத்தத்திற்காக ஆயத்தப்படுத்தினார். ஆனால் நடந்த துக்கமான சம்பவத்தையும் அதற்குரிய மூன்று காரணங்களையும் கவனிப்போம்.

தேவன் அவர்களை ஆயுதமணிந்த வீரர்களாக்கினார். ஆனால் தேவனுடைய செயலை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் ஆயுதங்களை அணிந்திருந்தும் அவர்களது இருதயம் தரிக்கப்படவில்லை. அவர்கள் இருதயங்கள் அவர்களைப் பின்வாங்கச் செய்தது.

அவர்கள் உடன்படிக்கையைக் கைக்கொள்ளவில்லை. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதனை மறந்து விட்டார்கள். சத்துருவோடு போராட்டமும் யுத்தமும் ஏற்படும் என்பதை தேவன் அறிந்து தகுதியான பொருட்களையும் அளித்திருந்தார். ஆனால் அவர்களோ அவருடைய அழைப்பைப் பற்றிக் கொள்ளவில்லை.

அவர்கள் அவரது பிரமாணங்களின்படி நடக்க மறுத்தார்கள். அவர் சொன்னவைகளை வாசித்து எவைகளைக் கொடுத்திருக்கிறாரென்று கவனித்து நடந்திருந்தால் யுத்தத்திற்கு ஆயத்தமாயிருந்திருப்பார்கள். ஆனால் வேத வசனங்களை வாசிக்கவில்லை. எனவே தேவன் எதை எதிர்பார்க்கிறார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள முடியவில்லை.

"எத்தனை பேர் தேவனுடைய மிகப் பெரிய கட்டளையை விசுவாசிக்கிறீர்கள்?" மத்.28:19-20 என்பது போதகர்கள் மகாநாட்டில் நான் அடிக்கடி கேட்ட கேள்வி. எல்லோரும் தங்கள் கரங்களை உயர்த்துவார்கள். உடனே அடுத்த கேள்வியைக் கேட்பேன். நீங்கள் அதை விசுவாசித்தால் அவர் கட்டளையிட்ட எல்லாவற்றையும் ஒழுங்காக கவனித்து மக்களுக்கு போதித்து, அவர்கள் அதனை செயல்படுத்த நடத்தினீர்கள்? என்பது அக்கேள்வி. ஆயினும் எனது 20 வருட அனுபவத்தில் அப்படிச் செய்கிறவர்கள் ஒன்றிரண்டு பேர் மட்டுமே.

நீங்கள் எதைச் சொன்னாலும் நீங்கள் அந்த மிகப் பெரிய கட்டளையை விசுவாசிக்கவில்லை என்று சொல்லுவேன். அந்தக் கட்டளையை மாற்றி 'சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுங்கள்' என்று சுருக்கி விட்டீர்கள். அதன் முக்கியப் பகுதி நான் உங்களுக்குக் கட்டளையிட்டவைகளையெல்லாம் அவர்கள் கைகொள்ளும்படிக்கு அவர்களுக்குப் போதியுங்கள் என்பதாகும். இதனை அப்.2-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். புது விசுவாசிகள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அன்னியோன்னியத்திலும், அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் வச.42. புதிய ஆதித்திருச்சபை ரோம அரசையே தலைகீழாக மாற்றியது. காரணம் அவர்கள் அப்போஸ்தலருடைய போதனைகளைக் கேட்டு அவற்றை நடைமுறைப்படுத்தினார்கள்.

அனேகர் வாரத்திற்கு ஒரு ஞாயிறு ஆராதனையில் திருப்திப்பட்டு எந்தப் போதனையையும் நடைமுறைப்படுத்துவதில்லை. சிலர் ஜெபக் கூடுகைகளில் பங்கு பெறுகிறார்கள். ஆனாலும் பெரும்பான்மையோர் இவற்றில் கலந்து கொள்வதில்லை. தேவ ஜனங்கள் தேவ சமுகத்தில் மன்றாடும் போது நீங்கள் எப்படி தலைவர்களாயிருக்க முடியும்? நாம் மனந்திரும்ப வேண்டும். நாம் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம்.

நாம் தூய ஆவியாலும், ஜீவனுள்ள கிறிஸ்துவாலும், தேவனுடைய நிறைவினாலும் தரிப்பிக்கப்பட்டவர்கள். வேத வசனங்களாலும் நாம் தரிப்பிக்கப்பட்டுள்ளோம். நாம் தேவனுக்கு முன்பாக ஜெபத்தின் மூலம் வருவது இன்னொரு விதமான தரிப்பித்தல். அவர் தமது ஜனங்களை நமக்கு

உதவியாக சுற்றிலும் வைத்திருக்கிறார். ஆயினும் ஏன் நாம் போரில் முதுகு காட்டுகிறோம்? நமது சகோதரர்களை ஒதுக்கி, அவர்கள் தனியாக யுத்தம் செய்ய விட்டு விட்டோம்.

### நாம் ஈடுபடுவதற்கான செயல் முறை வழிகள்

தேவன் போரில் நாம் ஈடுபட அழைக்கும் ஒரு வழி நாம் ஆராதிக்கும் சபை ஆராதனையில் நடைபெறலாம். ஆராதனை ஆரம்பத்தில் ஒரு ஜெப நேரமுண்டு. போதகர் உங்களுக்கு ஏதேனும் பாரமிருந்தால் அல்லது துதிக்க வேண்டுமானால் முன்னால் வந்து தேவனை சந்தியுங்கள் என்பார். பொதுவாக முன்பகுதி மக்களால் நிரம்பி விடும்.

ஒரு நாள் காலை ஆராதனையின் போது ஒரு வாலிபன் பீடத்தின் முன் வந்து பெருமூச்சு விடுவதைப் பார்த்தேன். ஆண்டவர் என்னிடம் பேசி அவனுக்கு உதவி செய்யும்படி ஏவினார். நான் அவனிடம் சென்று ஜெபிக்க ஆரம்பித்தேன். அப்போது அவன் என் கழுத்தைக் கட்டிக் கொண்டு 'நீங்கள் Dr.பிளாக்கபேதானே?' என்றான்.

நான் அவனுடைய பாரத்தை விசாரித்த போது தான் சட்டப்படிப்பில் பட்டம் பெற்று விட்டதாகவும் தேவன் அவனை ஊழியத்திற்கு அழைப்பதாகவும் கூறினான். தான் ஒரு முடிவு எடுக்க யாரையேனும் தேவன் அனுப்பும்படி அவன் ஜெபித்ததாகக் கூறினான். தேவன் என்னை அனுப்பியதாக அவனே கூறினான்.

தேவன் அவனுக்கு உதவி செய்யும்படி என்னை அனுப்பியிருந்தார். நான் பல சாக்கு போக்குகளைச் சொல்லிக் கொண்டு இருந்த இடத்திலேயே இருந்திருக்கலாம். அவனை எனக்குத் தெரியாது, ஆயினும் அவன் எனது குடும்பத்தின் ஒரு அங்கத்தினனல்லவா? இந்த யுத்தத்தில் அவனுக்கு உதவி செய்யாமலிருக்க முடியுமா!

இன்னொரு ஞாயிறு ஆராதனையில் ஒரு பெண் கண்ணீரோடு ஜெபித்துக் கொண்டிருந்தாள். தேவன் என்னோடு பேசிய போது அவளண்டை சென்றேன். ஏதேனும் கடின பாரம் உங்களை அழுத்துகிறதா? என மெதுவாகக் கேட்ட போது அவள், இது என் கணவருடைய முதல் நினைவு நாள்; என்னால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றாள். மேலும் ஒரு ஆண்டு காலமாகத் தான் ஒரு கட்டுக்குள்ளிருக்கிறேன். இதிலிருந்து விடுபட வழி தெரியவில்லை என்றாள்.

நான் யுத்த ஆயுதங்களை முழுவதுமாகத் தரித்திருந்தேன். நான் ஜெபிக்கலாமா? நீங்கள் ஜெபிக்க அறியாமலிருந்தால் ரோமர் 8:26-ஐ வாசியுங்கள் என்றேன். மெதுவாக என் உள்ளத்தில் 'ஆண்டவரே எப்படி ஜெபிக்க என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு உதவி செய்யும்' என்று பேசிக் கொண்டு ஜெபிக்க ஆரம்பித்தேன். வேத வசனத்தின் அடிப்படையில் ஆவியானவருடைய ஒத்தாசையுடன் ஜெபித்தேன். அவள் வாழ்வில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஜெபம் முடிந்ததும் 'நான் விடுதலை பெற்று விட்டேன்' என முகமலர்ச்சியுடன் கூறினாள். கிறிஸ்மஸ் காலத்தில் அவளை சந்தித்த போது "இந்த கிறிஸ்மஸ் எனக்கு சந்தோஷமான காலம். எனது கணவரை நான் நினைவு கூருகிறேன். ஆனால் நான் கட்டுகளுக்குள்ளில்லை. நான் விடுதலையுடனிருக்கிறேன்" என்றாள்.

### மேலும் சில திருஷ்டாந்தங்கள்

ஒரு சபையார், தேவ பிரசன்னத்தையும், செயல்பாட்டினையும் அறிந்து கொள்வது எப்படி என தங்களுக்குப் போதிக்கும்படி அழைத்தார்கள். இவ்வாறு ஒரு ஞாயிறு காலை ஆராதனையில் நான் பிரசங்கித்த போது 10 வயது நிரம்பிய ஒரு பெண் குழந்தை முன்னால் வந்து முழங்காற்படியிட்டாள். அவளுக்குத் துணையாக யாரும் வரவில்லை. எனவே நான் பீடத்திலிருந்து இறங்கி அவளண்டை முழங்காற்படியிட்டேன். அவள் இழந்து போன தன் சிநேகிதிக்காக பாரத்தோடு ஜெபித்துக் கொண்டிருந்தாள். "இந்த காலை தேவ பிரசன்னத்தில் அற்புதமானது, உனது ஜெபத்தை ஆண்டவர் கேட்டார். உனது சிநேகிதி இரட்சிப்படைவாள்" என்று அவளிடம் கூறினேன். வேதத்தின் அடிப்படையில் நான் இதைக் கூறினேன். அதே இரவில் நான் பிரசங்கித்த போது இந்தச் சிறுமி மற்ற சிறுமியுடன் முன்பகுதியில் வந்து ஜெபித்தாள். தேவன் ஜெபத்தைக் கேட்டார்.

மக்களை ஆண்டவர் கட்டுகளிலிருந்து விடுவிக்க ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட நீங்கள் ஆயத்தமா? யாரேனும் பாரத்தோடு ஜெபிக்க முன் செல்லும் போது பெரியவர்கள் உதவி செய்யட்டும் என்று இருக்க வேண்டாம். தேவன் உங்களை அழைத்தால் ஆவிக்குரிய போராட்டத்தில் நீங்கள் உதவியாயிருக்க வேண்டும். அவர்களோடு சேர்ந்து ஜெபிக்கும் போது சில வேளைகளில் யுத்தம் அதிகரிக்கலாம். ஆனால் இறுதியில் வெற்றியுண்டு. சத்துரு தோற்கடிக்கப்பட்டு கிறிஸ்து மக்களின் வாழ்வில் ஆண்டவராக மாறுகிறார்.

ஒரு ஓய்வு நாளில் நான் அழைப்புக் கொடுத்த போது சிலரோடு எனது இரண்டாவது மகனும் முன்னால் வந்து ஜெபித்துக் கொண்டிருந்தான். நான் அவனண்டை வந்தபோது அவன் என்னிடம், 'அப்பா இன்னும் சிலர் முழங்காலில் நிற்கிறார்களே அவர்களுக்கு உதவி செய்யுங்கள்' என்றான். நான் 'மகனே நான் உனது ஒரே தந்தை, உன்னோடு சமயம் செலவழிப்பது எனது கடமை' என்றேன். அவனோடு சேர்ந்து ஜெபித்த போது அவன் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தான். தேவ அழைப்பைக் குறித்த போராட்ட நேரமாக அது இருந்தது. அவன் ஒரு கல்லூரி மாணவன்.

நான் இந்த ஜெப போராட்டம் எனக்குரியதல்ல என்று தட்டிக் கழிக்கவில்லை. "ஹென்றி நீ உன் மகனுக்காக ஜெபித்தாய். இனி அவனது வாழ்வின் பிற்கால போராட்டத்தை அவன் பார்த்துக் கொள்வான். இப்போது அவனுக்கு உதவி செய்தாய் அவன் வெற்றி பெறுவான்" என்று ஆண்டவர் என்னோடு பேசினார். அவன் ஒரு ஊழியக்காரனாக மாறினான். எனது ஐந்து பிள்ளைகளும் தேவ பணியிலிருக்கிறார்கள். தேவன் ஜெபபோராட்டத்தில் வெற்றி தந்ததற்காக அவருக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

### நீங்கள் விழித்திருந்து இயேசுவோடு ஜெபிப்பீர்களா?

தேவனுக்கு நேராக திட்டமான முன்னேற்றம் வேண்டும். கெத்செமனேயில் அவரது அழைப்புக்குக் கீழ்ப்படிய வேண்டும். '**தேசத்திற்கான பாரத்தை நான் சுமக்கும்போது நீங்கள் என்னோடு விழித்திருந்து ஜெபியுங்கள்**' என்று அவர் அழைக்கிறார். 'கர்த்தாவே உம்மோடு நான் வருகிறேன்' என்று உறுதியுடன் சொல்வோமா? முழங்காலில் நின்று ஜெபிப்போம்.

"இந்த ஜெபபோராட்ட வேளையில் நான் பின்மாற மாட்டேன். நீர் வெற்றியைத் தருவதைக் காணகாத்திருக்கிறேன். நானும் உம்முடனிருப்பேன். என் ஜெப வாழ்வில் இன்னும் அதிக ஆழமாகச் செல்லுவேன். நான் இருந்த இடத்திலிருந்து, நான் இருக்க வேண்டுமென்று நீர் எதிர்பார்க்குமிடத்திற்கு வருகிறேன்" என்று சொல்வோம்.

## எழுப்புதலுக்காக இதய கதறல் 2017
**(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)**

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| ஜுலை | 15-07-2017 3-வது சனி | |
| ஆகஸ்ட் | 19-08-2017 3-வது சனி | அசெம்பிளி ஆப் காட் சபை, மணலி, சென்னை |
| செப்டம்பர் | 16-09-2017 3-வது சனி | இயேசு நம்மோடு சபை, கருங்கல், குமரி மாவட்டம் |
| அக்டோபர் | 07-10-2017 1-வது சனி | மாரநாதா ஜெபவீடு, பொள்ளாச்சி |
| நவம்பர் | 11-11-2017 2-வது சனி | காந்தி நகர் C.S.I. சபை திருநெல்வேலி |
| டிசம்பர் | 02-12-2017 1-வது சனி | I.P.C சபை மார்த்தாண்டம் |

# ஆண்டவரே, இறங்கி வாரும்! நீர் எங்களுக்கு வேண்டும்

**Comedown, Lord! we need you**

Roger Ellsworth

*பாடபகுதி ஏசா.63:17 - 64:2*

ஏசாயா ஆண்டவர் தமது ஜனத்தை சந்திக்கும்படி கட்டாயப் படுத்துகிறார். அவர்கள் ஆண்டவரது இனிய முகத்தை தவற விட்டு விட்டார்கள். அவரது உதவிக் கரமும், கரிசனையுள்ள இருதயங்களும் கூட தவறிவிட்டன (ஏசா.63:15-16). எனவே 'நீர் எங்களுக்கு வேண்டும்' என்று கதறுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து ஏசாயா இங்கு குறிப்பிடுகிறார். அவர்களின் சிந்தனையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படுகிறது. தேவனில்லாமலேயே நன்றாகவும் அமைதியாகவும் கடந்து செல்லலாம் என்பது அவர்களது மனோபாவனை. ஆனால் ஏசாயா பார்த்துக் கொண்டிருக்கும் போது வாழ்வின் இடிபாடுகளின் மத்தியில் இறுதியாக தேவன் மிக முக்கியமானவர் என்ற உணர்வுக்கு வந்து விடுகின்றனர்.

ஏசாயா நமக்குக் காண்பிப்பது தேவனுடைய ஜனங்களின் காட்சி. தேவனை அறியாதவர்களுக்குத்தான் தேவன் தேவை என்று நாம் எண்ணலாம். ஆனால் இப்பகுதி தேவ பிள்ளைகள் சுய திருப்தியின் ஆபத்தான நிலைக்கு வரலாம் என்பதைத் தெளிவாக காண்பிக்கிறது. இன்று சபை ஏசாயா காலத்து மக்களைப் போலவே தான் காணப்படுகிறது. தேவனின்றி நாம் நம்பிக்கையற்றவர்களும் உதவியற்றவர்களுமாயல்லவா வாழ வேண்டும். நமது ஞானம், திறமை, என்பவற்றால் சாத்தானை எதிர்க்க முடியும் என்று எண்ணுகிறோமா?

ஆவிக்குரிய விளைவுகளை சொந்த முயற்சியால் ஏற்படுத்த முடியாது. தாவீது சவுலின் போராடைகளில் யுத்தம் பண்ண முடியாது. நமக்குத் நல்ல பண்புகளிருக்கலாம், ஆனால் வல்லமை வேண்டும். நமது நடைமுறைகளால் வாழ்நாளெல்லாம் செய்ய முடியாததை தேவன் ஒரே வினாடியில் செய்யக் கூடும் என்பதை நாம் உணர வேண்டும். தேவனுடைய தேவையை நாம் உணர்ந்து அவரை நாடுவோமாக! தேவ ஜனத்திற்கு அவருடைய வல்லமை தேவை என்பதற்கான இரு காரணங்களை இந்த வசனங்களில் காணலாம்.

**1. எழுப்புதலுக்காக ஏசா.63:17-19**

நமது சொந்த பெலத்தாலும் ஞானத்தாலும் எழுப்புதலைத் தேடுகிறோம். நாம் விரும்பும் நேரத்தில் எழுப்புதலை ஏற்படுத்தலாம் என்று கடந்த நூற்றாண்டில் கூறப்பட்டது. அதற்காகச் சில வழிமுறைகளைக் கையாண்டால் போதும் என்பது கருத்து.

இந்தக் கருத்து தவறானது என்பதை ஏசாயாவின் ஜெபம் தெளிவுபடுத்துகிறது. தேவ பிள்ளைகள் தாங்களே எழுப்புதலை ஏற்படுத்த முடியுமானால் ஏசாயா இப்படி ஜெபிக்க வேண்டியதில்லை. ஆனால் மக்களின் நிலை இவ்வளவு சீர்கெட்டிருந்தபடியால் தேவன் ஒருவரே இந்நிலையில் உதவி செய்ய முடியும்.

ஏசாயா முதலாவது ஜனங்களின் இருதய கடினத்தை அறிக்கையிடுகிறார். இதன் மூலம் இருதய கடினம் இருவிதங்களில் வெளிப்படுகிறது வ.17. முதலாவது இருதய கடினம் தேவனுடைய கட்டளைகளை உணர்ந்து கொள்ளக் கூடாமலிருக்கிறது. எனவே அதிலிருந்து விலகிச் செல்கிறது. இரண்டாவதாக கடின இருதயம் தேவபயத்தை உணராமல் தடுக்கிறது.

இன்னொரு விதமாகக் கூறினால் நமது இருதயம் கடினப்படும் போது நாம் பாவத்தைக் குறித்த கவலையும், கவனமும் அற்றவர்களாகி விடுகிறோம். தேவ வழிகளைக் குறித்த அக்கரையற்று நிர்விசாரமாய் நடக்கிறோம். நாம் நடக்கும்படியான சில வழிகளை தேவன் அமைத்திருக்கிறார். அந்த வழிகள் சந்தோஷமும் நீதியுமானவை 64:5. ஆனால் நம் இருதயம் கடினம் கொள்ளும் போது அது நமது சொந்த வழிகளால் நிறைந்து தேவனுடைய வழிகளை அலட்சியப்படுத்தும்.

ஒரு சுவரொட்டியில் இவ்வாறு எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தேன். "இந்த நாட்டில் அக்கரையற்ற நிலை அதிகமாகி விட்டது. ஆனால் அதைக் குறித்து அக்கரை கொள்வாரில்லை". நமது இருதயம் கடினம் கொள்ளும் போது, நாம் தேவனை விட்டு தூரம் போகிறோம் என்று நாம் அறிந்தாலும் மேலும் மேலும் அக்கரையற்றவர்களாகி விடுகிறோம். அதைக் குறித்த கவலையே நமக்கில்லை.

கடின இருதயத்தின் இன்னொரு வெளிப்பாடு தேவ பய உணர்வு இன்மையாகும். ஒரு காலத்தில் தேவ பயத்தைக் குறித்து அதிகமாகப் பேசினோம். இன்று நமக்கு அதைக் குறித்துப் பேச தைரியமில்லை. தேவபயம் என்பது பயத்தைக் கொண்டு வருவதல்ல, ஆனால் தேவனைப் பற்றிய பயம் நமக்கு வேண்டும். பாவத்தில் விழும் போது தேவன் சிட்சிக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது.

ஏசாயாவின் ஜெபம் சிட்சையின் கொடிய விளைவை அனுபவித்த தேவ ஜனங்களின் சார்பாக ஏறெடுக்கப் பட்டது. இந்த ஜெபம் அவர்கள் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு, ஆலயமும் பட்டணமும் உடைந்த கற்களாக மாறி அவர்கள் பாபிலோனில் சிறைக்கைதிகளாக மாறிய பின்புதான் ஏறெடுக்கப் பட்டது. இந்த அனுபவத்தால் பயப்படாதவர்கள் யார்? இந்த ஜனங்கள் தேவனுக்கும் அவரது சிட்சைக்கும் பயப்பட்டிருந்தால் இவ்விதமான கலக்கங்களைத் தவிர்த்திருக்கலாம்.

ஆனாலும் அவர்களது இருதயக் கடினத்தின் காரணத்தை பாருங்கள்! "கர்த்தாவே நீர் எங்களை உம்முடைய வழிகளை விட்டுத் தப்பிப் போகப் பண்ணி எங்கள் இருதயத்தை உமக்கு பயப்படாதபடிக்குக் கடினப்படுத்து வானேன்? உம்முடைய ஊழியக்காரரினிமித்தமும் உம்முடைய சுதந்தரமான கோத்திரங்களினிமித்தமும் திரும்பியருளும்" வச.17. ஏசாயாவின் வசனங்களின்படி தேவன் அவர்கள் இருதயங்களைக் கடினப்படுத்தியிருக்கிறார், இது கூடுமா? அல்லது ஏசாயா மக்களின் பாவத்திற்காக தேவனைக் குற்றப்படுத்துகிறாரா?

தேவ ஜனமாகிய நாம் பாவம் செய்ய சாயும் போது நாம் மனந்திரும்ப சில காலம் வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது. இந்த வாய்ப்புகள் சரியாகப் பயன்படுத்தப்படாவிட்டால் அவர் நம்மை பாவங்களுக்கு அப்படியே விட்டு விடுகிறார். முதல் தண்டனை, அவரிடம் திரும்புவதற்கான வாஞ்சையை அகற்றுகிறார்.

பல ஆண்டுகளாக நாம் பாவத்திலிருந்து மனந்திரும்பாவிட்டால் நியாயத் தீர்ப்பு உண்டு என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆயினும் பாவத்தின் விளைவுகள் ஏற்படாததால் அப்படியே செல்கிறோம். தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஏற்கெனவே வந்து விட்டது என்பதை நாம் உணரவில்லை. ஆவிக்குரிய காரியங்களைக் குறித்த சிரத்தையின்மையே தேவனுடைய நியாயத் தீர்ப்பு.

நாம் விரும்பும் போது எழுப்புதல் ஏற்படும் என்று கூறுவது தவறு. நமது இருதயங்கள் கடினப்பட்டு எழுப்புதலின் மேல் வாஞ்சையற்றுப் போய் விட்டோம். இந்தக்கடின தன்மையை தேவன்தான் நீக்க வேண்டும்.

தீர்க்கன் தொடர்ந்து அவர்களுக்கு தேவன் தேவை ஏனென்றால் அவர்கள் மிதிக்கப்பட்டுப் போனார்கள் 63:18-19 என்கிறார். இந்த நிலை இரண்டு விதங்களில் தெளிவாகிறது. முதலாவது அவர்கள் முற்றிலும் சத்துருக்களால்மேற்கொள்ளப்பட்டு விட்டார்கள் (வச.18). இரண்டாவதாக தேவனால் ஒரு போதும் ஆளப்படாதவர்கள் போன்ற நிலையை எட்டி விட்டார்கள்.

தேவ ஜனங்கள் இதைவிட தாழ்ந்த நிலைக்கு வர முடியாது. ஏனெனில் அவர்கள் தங்களை மேற் கொண்ட அந்நிய தெய்வங்களை வணங்கும் மக்களைப் போலாகி விட்டார்கள். இன்று நம்முடைய நிலை அப்படி இருக்கவில்லையா? நமது சத்துருக்கள் நம்மை சுற்றிலும் வெற்றி கொள்கிறார்கள். கிறிஸ்தவ போதனைகள் பரிகசிக்கப் படுகின்றன. பிறவாத சிசு கொலைகள் மூலம் வாழ்வு அதிகமாக சவாலாக் கப்படுகிறது. இவைகளைத் தடுக்காமல் கிறிஸ்தவர்கள் அலைந்து திரிகிறார்கள்.

தேவன் நமக்குத் தேவை. அவர் மட்டுமே நம்மை மிதிக்கப்படும் நிலையிலிருந்து மீட்க முடியும். நமது நிந்தையை

அவரால் மட்டுமே நீக்க முடியும். எழுப்புதலுக்காக மட்டுமல்ல இன்னும் சில காரியங்களுக்காக அவர் தேவை.

### பாவிகள் மனந்திரும்புவதற்காக
(ஏசாயா 64:1-2)

'உமது நாமத்தை சத்துருக் களுக்குத் தெரியப்பண்ணுவதற்கும்' என்று ஏசாயா ஜெபிக்கிறார். இதைக் குறித்த கரிசனை சபைக்கு வேண்டும். அவரை அறியாதவர்கள் மத்தியில் அவரது நாமம் அறிவிக்கப்பட வேண் டும், ஆனால் இதை நாம் முற்றிலும் உணர்ந்திருக்கிறோமா? இது கடினமான பணி. நாம் இதற்கு தேவன் மேல் முற்றி லும் சார்ந்திருக்க வேண்டும்.

தேவனுடைய நாமம் அறியப் படுவதற்காக எவைகள் அடங்கியுள்ளன என்பதற்கு மூன்று உதாரணங்களை ஏசாயா குறிப்பிடுகிறார். முதலாவது அவர் பர்வதங்கள் உருகுவதை குறிப் பிடுகிறார். மலைகள் பாவிகளைக் குறிக் கின்றன. மலைத் தொடர்கள் போல அவர்கள் தேவனுக்கு எதிராயிருக்கி றார்கள். எதிர்ப்புகளாகிய மலைகள், கடினத் தன்மை, பிடிவாதம், அவிசு வாசம், குருட்டாட்டம் இவை எல்லாம் அவருடைய மனதில் தோன்றுகின்றன. இவை தேவனை அறியும் அறிவுக்கு எதிரானவை.

தண்ணீரின் குளிர்ச்சியையும் அவர் குறிப்பிடுகிறார். பாவியின் இருதயம் குளிர்ந்த நிலையிலிருப்பதால் ஆவிக்குரிய தாக்கங்கள் மறைந்து விடுகின்றன. பனிக்கட்டியை உருக்கச் செய்யவும் தண்ணீரைக் கொதிக்கச் செய்யவும் தேவைப்படுகிறது.

மேலும் ஏசாயா அக்கினி எரிவ தைக் குறித்தும் பேசுகிறார். பாவியின் இருதயம் முட்செடிகளால் பின்னிக் கிடக்கிறது. அது உலகத்தின் கவலைகள், ஐசுவரியத்தின் மயக்கம் என்று மத்.13:22 விளக்குகிறது. பாவி மனந்திரும்புமுன் தேவனுடைய வசனம் நல்ல நிலத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். முட்செடிகள் எரிக்கப்பட வேண்டும்.

மலைகளை உருக்கக் கூடியதும், தண்ணீரைக் கொதிக்கச் செய்வதும், பாவியின் இருதயத்தில் காணப்படும் முட்செடிகளை அகற்றுவதும் தேவ அக்கினியால் மட்டுமே கூடும். எனவே நமக்கு தேவ வல்லமை தேவை. **ஆக சபை சுவிசேஷப் பணி செய்ய முழங்காலில் நின்று பாவ உணர்வையும், மறுபிறப்பையும் உண்டு பண்ணும் தேவ வல்லமைக்காக ஜெபிக்க வேண்டும்.**

எனவே சபைக்கு இரு பெரிய தேவைகள் இருக்கின்றன. சபைக்கு எழுப்புதலும், தேவனை அறியாதவர் களுக்கு மனந்திரும்புதலும் வேண்டும். தானாகவே இவைகளைச் செய்ய சபைக்கு வல்லமையில்லை. சபையின் அங்கத்தினராகிய நாம் எழுப்புதலை யும், மக்களின் மனமாற்றத்தையும் எதிர் பார்த்தால் முழங்காலில் நின்று ஏசாயாவோடு 'ஆண்டவரே இறங்கி வாரும், நீர் எங்களுக்கு வேண்டும்' என்று ஜெபிப்போம்.

# மருத்துவ வள்ளத்திலிருந்து திருடர்களின் குகை வரையிலும் – 1

**From Hospital boat to Robbers den - Part 1**

Oswald J.Smith

காலை 5 மணி நதியின் கரையி லிருந்து சீன பாஷையில் அழைப்பு வந்தது. ஒரு வினாடியில் மிஷனெரிகள் மருத்துவ வள்ளத்தின் மேல் தளத்தில் வந்து விட்டனர். கரைக்கு அப்பால் ஒரு கூட்டம் முரட்டு மனிதர் ஆயுதம் தரித் தவர்களாக நின்று கொண்டிருந்தனர். எனவே கள்வர்கள் கையில் அகப்படும் நிலை ஏற்பட்டது.

முப்பது ஆண்டுகளாக ராபர்ட் ஜாஃப்ரே சீனாவில் பிரயாணம் பண்ணி ஊழியம் செய்தவர். இதுவரை அவர் திருடர்களை சந்தித்ததில்லை. தேசம் அக்கொடியவர்களால் நிரம்பியிருந்தும் இதுவே அவர்களை முதல் முதலாக சந்தித்த அனுபவம்.

சிந்திக்க நேரமில்லை, திருடர் கள் கொள்ளையடிப்பதிலே கண்ணும் கருத்துமாயிருந்தனர். நதியில் வரும் ஒவ்வொரு படகிலும் பணம் பெறுவது அவர்களது வழக்கம். எனவே திருடர் களின் தலைவன் சற்று முன்னதாக வந்து தனது விருப்பத்தை தெரிவித்தான். "நீங்கள் கொடுக்க வேண்டிய பணத்தை தயவாகக் கொடுத்து விடுங்கள்" என்றான்.

'நாங்கள் மிஷனெரிகள் சுவி சேஷம் அறிவிக்க வந்தவர்கள்' என்று ஜாஃப்றி பதிலளித்தார்.

'அது எங்களுக்குத் தெரியாது, இந்த நதியில் செல்லும் அனைத்து வள்ளங்களும் பணம் செலுத்தி ஆக வேண்டும்' என்றான் திருடர் தலைவன்.

'ஆனால் இது ஒரு மருத்துவ வள்ளம். நீங்கள் வியாபார வள்ளங்களில் பணம் கேட்கலாம். ஆனால் இத்தகைய வள்ளத்தில் நீங்கள் பணம் எதிர் பார்க்க முடியாது' என்றார் ஜாஃப்றே

'கட்டாயம் கொடுத்துதான் ஆக வேண்டும்' என்று பயமுறுத்தும் குரல் பதிலளித்தது.

மிஷனெரி நற்செய்தியைக் குறித்துப் பேசியும், விவாதித்தும் எந்த பயனும் ஏற்படவில்லை.

### தொல்லை மாறியது

திடீரென ஜாஃப்ரே ஒரு அடி முன் எடுத்து வைத்தார். புதிய ஒளி அவரது கண்களில் வீசியது. சீனர்களைப் போல சிந்தித்த அவர் இன்னொரு வழியைக் கையாள நினைத்தார். வேடிக் கையாகப் பேச அவர் ஆரம்பித்தார்.

'தலைவரே, மிஷனெரிகளாகிய நாங்கள் காணிக்கை கொடுக்கும் பழக்கம் உடையவர்களல்ல, நாங்கள் பெற்றுக் கொள்வதுதான் வழக்கம். எங்கள் பணி யெல்லாம் நன்கொடையாளர்களால் தாங்கப்படுகிறது. நீங்களும் எங்கள் பணிக்காக பொருள் அளிக்கலாமே!' என்றார் ஜாஃப்றே.

தலைவனின் முகத்தில் ஆச்சரி யம் தோன்றியது. புன்முறுவல் செய்து விட்டு ஒரு நிமிடம் சிந்தித்தான். 'எனது பழக்கமும் கொடுப்பதல்ல, பெற்றுக் கொள்வதுதான்' என்றான்.

உடனே ஜாஃப்ரே நாம் இரு வரும் ஒரே நிலையிலிருக்கிறோம். நாம் பெற்றுக் கொள்பவர்கள் மட்டுமே, கொடுப்பவர்களல்ல என்றார்.

திருடர் தலைவன் ஓரளவு திருப் தியடைந்தான். ஆயினும் எதையும் பெறாமல் அவர்களை அனுப்புவது எப்படி!

அதே வேளையில் ஜாஃப்ரே வேகமாக சிந்தித்தார். 'உங்களிடம் வியாதியஸ்தர் யாரேனும் உண்டா?' எனக் கேட்டார்.

ஆம் உண்டு என பதில் வந்தது.

அவர்களை வெளியே கொண்டு வாருங்கள், நான் அவர்களை ஊச்செள விலுள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வேன் என்றார் ஜாஃப்ரே.

அப்படி நான் செய்ய மாட் டேன். ஆனால் உங்களிடம் மருந்துகள் உண்டா? என்று கேட்டான் தலைவன்.

கப்பலிலிருந்து ஒருவர் இரு கரங்களிலும் மருந்துகளை எடுத்து வந்தார்.

அதைக் கண்ட திருடர்கள் பயந்து நடுங்கி தரையில் விழுந்தனர். ஜாஃப்ரே அவர்களிடம் இது மிகவும் நல்லது, எடுத்து பயன்படுத்துங்கள், பல வியாதிகளையும் குணமாக்கும் என்றார்.

மருந்துகளை சேகரித்து விட்டு நன்றி என முறுமுறுத்து விட்டு அவர்கள் திரும்பினர். ஆனால் தலைவனின் முகத் தில் ஆச்சர்யத்தை ஜாஃப்ரே கண்டார். எனவே அவனிடம் பேச ஆரம்பித்தார். "நாங்கள் உங்கள் தேசத்திற்கு வந்திருக் கிறோம். பாவமனிதருக்கு அன்பை கொண்டு வந்த தேவனுடைய செய்தி அது. அவர் உலகை நேசித்து தமது ஒரே குமாரனை உலகிற்கு அனுப்பினார். அவர் நமக்காக மரித்தார். அவரை விசுவாசிக்கிற அனைவரையும் மன்னித்து ஏற்றுக் கொள்கிறார். இதை உங்களுக்குச் சொல்ல அவர் எங்களை அனுப்பியிருக் கிறார். ஆண்டவராகிய இயேசுவை உங்கள் இருதயங்களில் ஏற்றுக் கொள்ளுங்கள்".

ஒரு வினாடி அனைவரும் அமைதலாயினர். சரி நீங்கள் போகலா மென்று தலைவன் கூற மற்ற கள்வர் களுடன் காட்டுக்குள் மறைந்தான்.

### இன்னொரு சம்பவம்

சீனாவில் அயல் நாட்டு மிஷனெரிகளைப் பாதுகாப்பது மாஜிஸ் திரேட்டின் கடமை. கூறப்பட்ட சம்ப

*வத்தை அறிந்த அவர் 80 போர் வீரர்களை மிஷனெரிகளின் பாதுகாவலுக்காக அனுப்பினார்; ஆனால் இது உதவிக்குப் பதிலாக உபத்திரவமாக மாறி விட்டது.*

*சில வாரங்கள் முற்றுகையிட்ட சேனை க்வெய்லின் நகரத்தை சூழ்ந்து கொண்டு மிஷனெரிகள் வெளியே செல்ல முடியாமலும், அவர்களது நிலையை வெளியே தெரிவிக்கவும் கூடாமலாகி விட்டது. எப்படியாவது தப்புவிக்கப்பட வேண்டும் என்பது ஜாஃப்ரேயின் ஜெபம். எனவே ஒரு குழப்பமான பிரயாணத்தை 3 மிஷனெரிகளுடன் ஜாஃப்ரே ஆரம்பித்தார். அது நம்பிக்கையற்ற துணிச்சலாயிருந்தது. எனினும் அவர் முயற்சியை மேற்கொண்டார். ஆனால் பாதி வழியைக் கடந்து ஒரு ஆற்றின் வளைவில் வந்த போது திடீரென துப்பாக்கிகளின் சத்தம் கேட்டு அதிர்ச்சியடைந்தனர். ஒரே வினாடியில் வள்ளம் நிறுத்தப்பட்டது. அப்போது மாஜிஸ்திரேட்டால் அனுப்பப்பட்ட 80 வீரர்கள் வள்ளத்தின் பின்னாக வந்து திருடர்கள் மேல் சுட கட்டளை பெற்றனர். ஆனால் பதிலாக சுட்ட குண்டுகள் மிஷனெரிகளின் வள்ளத்தைத் தாக்கின. சிறிது நேர சண்டைக்குப் பின் பாதுகாவலுக்காக வந்த வீரர்கள் தங்கள் ஜீவனுக்காக ஓடி மறைந்தனர். மிஷனெரிகள் பாதுகாவலற்று நின்றனர் .*

*இப்போது சிந்தித்து பயனில்லை. வீரர்கள் பாதுகாவலுக்கு அழைக்கப்படாவிட்டால் சண்டை ஏற்பட்டிராது. இப்போது மிகவும் பிந்தி விட்டது. திருடர்கள் வள்ளத்தில் ஏறி விட்டனர்.* (தொடரும்)

## அறிவிப்புகள்

**1. ஒவ்வொரு மாதமும் 27, 28 தியதிகளில் வருகையின் தூதன் அனுப்பப்படுகிறது. அடுத்த மாதம் 5-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் தயவு செய்து உடனே தொலைபேசி வழியாக தெரிவியுங்கள்.**

**2.வங்கி வழியாக பணம் அனுப்பினால் மறவாமல் உடனே தெரிவியுங்கள். அது உங்கள் பெயரில் ரெசீது போடவும், அனுப்பவும் மிகவும் வசதியாயிருக்கும்.**

**3.நீங்கள் ஒவ்வொரு முறை எங்களை தொடர்பு கொள்ளும்போதும், தயவு செய்து உங்கள் தொலைபேசி எண்ணை எழுத மறக்க வேண்டாம்.**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

**5.** *சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் வாசகருக்காக ஜெபிக்கிறதற்காக ஒரு ஒழுங்கை ஏற்படுத்தினேன். அதில் ஒரு கை விரல் எண்ணிக்கையுள்ளோரின் ஜெபவிண்ணப்பங்களை, குடும்ப விபரங்களை பதிவு செய்து வைத்துள்ளேன்.*

*இப்பொழுது மாதந்தோறும் உபவாச ஜெபம் நடைபெறுவதால் எனக்கு ஜெபிக்க அதிகமான நேரம் கிடைக்கிறது. எனவே* **தயவு செய்து இதனை நிரப்பி அனுப்புங்கள்** *என்ற ஒரு படிவத்தை அநேகருக்கு அனுப்பி வருகிறேன். ஒரே ஒரு தாயார் மாத்திரம் நிரப்பி அனுப்பியுள்ளார்கள். என்னுடைய தனி ஜெப வேளையில் உங்களுக்காக அடியேன் ஜெபிக்க வாஞ்சிப்பீர்களானால்* **தயவு செய்து அதனை நிரப்பி அனுப்புங்கள்.**

**6.** *வருடத்திற்கு ஒரு முறையேனும் தயவு செய்து என்னை தொடர்பு கொள்ளுங்கள் என்று கடிதம் அனுப்பி வருகிறேன். ஒரே ஒரு தாயார் மட்டும் ஆவலோடு என்னை தொடர்பு கொண்டு பேசினார்கள்.*

**7.** *1918-ம் ஆண்டு உபவாச ஜெபம் நடத்த இன்னமும் 9 இடங்கள் தேவை. எத்தனையோ சபை ஊழியர்களுக்கு தூதன் பத்திரிக்கையை அனுப்பி வருகிறோம். ஒருவர் கூட அதைப்பற்றி எங்களை விசாரிப்பதில்லை.* **எழுப்புதலுக்காக இதய கதறல்** *7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு* **உங்கள் சபை கட்டிடத்தைத் திறந்து தருவீர்களா?** *உங்களுக்கு தேவையான ஆலோசனைகளை அளிப்போம்.*

*ஆகஸ்ட் மாத உபவாச ஜெபம், சென்னை எக்மோர் (Egmore) ரயில் நிலையத்திலிருந்து சுமார் 18 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மணலி என்ற இடத்திலுள்ள அசெம்பிளி ஆப் காட் சபையில் 19-08-2017 சனிக்கிழமை நடைபெறும்.*

*தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.*
*தேவ கிருபை உங்களோடிருப்பதாக.*

*உங்கள் சகோதரன்,*
*வெஸ்லி தேவதாசன்*
**(WESLEY DEVADASON)**

*அலுவலக போன் : 04652 403295*
*அலுவலக மொபைல் : 95432 21008*
*: 94897 40295*

*10.00 - 1.00; 2.00 - 6.00*

**பத்திரிகை செய்திகள்**

## இந்திய அஞ்சல் துறை

### அஞ்சல் துறையின் பல்வேறு சேவைகள்

(தொடர்ச்சி)

**புதிய திட்டம் அறிமுகம்:** அஞ்சல் வாடிக்கையாளர்களின் புகைப்படத்துடன் கூடிய “எனது அஞ்சல் தலை” என்ற புதிய திட்டம் அஞ்சல் துறையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அவர்களின் புகைப் படங்களுடன் கூடிய அஞ்சல் தலைகள் வெளியிடப் படும். வாடிக்கையாளர்களின் புகைப்படத்துடன் அழகிய சிறப்பு தபால் தலைகள் மற்றும் நிறுவனங்களின் சின்னம் (Logo) உள்ளடக்கிய தபால் தலைகள் இதன் தனி சிறப்பாகும்.

இந்த திட்டத்தில் அஞ்சல் தலைகளின் இடது புறத்தில் வாடிக்கையாளர்களின் புகைப்படம் இடம் பெற்றிருக்கும். ரூ.5 மதிப்பு கொண்ட இந்த அஞ்சல் தலைகளை இந்தியா முழுவதற்கும் 20 கிராம் வரையிலான தபால்களை அனுப்ப பயன்படுத்தலாம். எனது தபால்தலை (My Stamp) என்பது இந்திய அஞ்சல் துறையின் சிறப்பு நினைவு தபால் தலை வரிசையில் ஒரு மைல் கல்லாக திகழ்கிறது. வாடிக்கையாளர்கள் தரும் புகைப்படத்தின் தரத்தின் அடிப்படையில் தபால் தலைகள் அச்சிடப்படுவதால் அதன் முழு பொறுப்பும் அவர்களையே சார்ந்ததாகும். வாடிக்கையாளர்கள் நேரடியாக வந்து விண்ணப்பங்களை தந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

**நாகர்கோவில் நகரப் பகுதியில்**

## பொது இடங்களில் குப்பை கொட்டினால் ரூ.2 ஆயிரம் அபராதம்

### ஜுலை 24-ந் தேதி முதல் அமல்

நாகர்கோவில், ஜுன்.19-

தமிழக அரசின் திடக்கழிவு மேலாண்மை விதிகள் மற்றும் நாகர்கோவில் நகராட்சியில் இயற்றப்பட்டுள்ள உபவிதிகளின்படி, நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள சேவைக் கட்டணம், அபராத கட்டணம் வசூலிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொது இடம், தனியார் இடங்களில் குப்பைகளை கொட்டுதல், வாகனங்களிலிருந்து தூக்கி எறிதல், கடை மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து கழிவுகளை பொது இடங்களில் கொட்டுவது, மக்கும் மற்றும் மக்காத கழிவுகளை பிரித்து கொட்டாமல் இருப்பது போன்றவை கண்டு பிடிக்கப்பட்டால் ரூ.200 முதல் ரூ.2 ஆயிரம் வரை அபராதம் வசூலிக்கப்படும்.

இதுபோல் கட்டிடக்கழிவுகள், தோட்டம் மற்றும் மரக்கிளை கழிவுகள், கழிவுகளை எரித்தல், பொதுக்கூட்டங்கள், நிகழ்ச்சியில் கழிவுகளை சுத்தம் செய்யாமலிருத்தல் போன்றவற்றுக்கு ரூ.200 முதல் ரூ.5 ஆயிரம் வரை அபராதம் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சேவைக்கட்டணமாக, சொத்துவரி செலுத்தும் தனிநபர் வீடுகளுக்கு (மாதந்தோறும்) ரூ.10 முதல் ரூ.40 வரை சேவைக் கட்டணம் வசூலிக்கப்படும். இதேபோல், கல்வி நிறுவனங்கள், வியாபார நிறுவனங்கள், சினிமா தியேட்டர்கள், திருமண மண்டபம், கூட்ட அரங்கம், தொழிற்சாலை கழிவுகள் உள்ளிட்டவற்றுக்கும் சேவைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தினத்தந்தி

**Registered with the Registrar of News Paper**
**For India under R.N.I. TN TAM 11967/'67**
**Postal Reg. No. KKI/63/2015-2017**
**Date of Publication : 27th of Every month**
**Date of Posting : 27th & 28th of Every month**

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To